செ.வெ.எண்:116 நாள்:24.02.2018

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்டரங்கில் குழந்தை பாதுகாப்பு மற்றும் குழந்தைகள் சட்டங்கள் குறித்து அரசு பள்ளி தலைமையாசிரியர்களுக்கான ஒரு நாள் பயிற்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கிவைத்தார்.

-----

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்டரங்கில் குழந்தை பாதுகாப்பு மற்றும் குழந்தைகள் சட்டங்கள் குறித்து அரசு பள்ளி தலைமையாசிரியர்களுக்கான ஒரு நாள் பயிற்சி கூட்டம் இன்று (24.02.2018) நடைபெற்றது. பயிற்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

அப்போது மாவட்ட ஆட்சித்தலைவர் பேசியதாவது:-

நமது நாட்டில் குழந்தை வன்முறைகள் அதிகரித்து வரும் நிலையை புள்ளி விவரங்கள் உணர்த்துகின்றன. புளுவேல் போன்ற விளையாட்டுகளின் மூலம் குழந்தைகளை தற்கொலை செய்ய தூண்டும் நிலையும் உள்ளது. சிறு வயதிலே மாணவர்களுக்குள் வன்முறைகளும், பாலியல் ரீதியான துன்புறுத்தல்களும் உள்ளது. இதற்கு குழந்தைகள் பாதுகாப்பு சட்ட விழிப்புணர்வு குறைவாக உள்ளது ஒரு காரணமாகும். பள்ளிகளில் குழந்தைகளுக்கு முழு பாதுகாக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்கு உள்ளது. இது போன்ற பயிற்சியின் மூலம் குழந்தைகள் பாதுகாப்பு சட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ளலாம். தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் மாணவ, மாணவிகளின் நடவடிக்கைகளில் ஏற்படும் திடீர் மாற்றங்களை கண்காணித்து மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும். பள்ளி பருவத்திலே சாதிய வன்முறைகளும் உள்ளது. இவைகளையும் கண்காணிக்க வேண்டும். பள்ளிகளில் நடைபெறும் சம்பவங்கள் மற்றும் பிரச்சனைகளை உயர் அலுவலர்களுக்கு உடனடியாக தெரிவித்து தீர்வுகான வேண்டும். அனைத்து குழந்தைகளையும் நன்றாக படித்து, சிறந்த குடிமக்களாக திகழ்ந்திட ஆசிரியர்கள் முழு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். என பேசினார்

தொடர்ந்து கற்றல் திறன் குறைபாடு மற்றும் மெல்ல கற்கும் குழந்தைகளை கையலும் வழிமுறைகள் குறித்த கையேடு, ஆசியர்களுக்கான நேர்மறை ஒழுங்குபடுத்தும் நுட்பங்கள் குறித்த கையேட்டினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வெளியிட மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு செயலர், நீதியரசர் திரு.ராமலிங்கம், முதன்மை கல்வி அலுவலர் திருமதி.முருகானந்தம், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.தேவ் ஆனந்த், மற்றும் அலுவலர்கள், அரசு பள்ளி தலைமையாசிரியர்கள் கலந்து கொண்டனர்.

வெயியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.